22nd November 1963]

குடிநீர்த்தொட்டி (வேந்தன்பட்டி)

*437 கேள்வி.—திரு. செ. மாதவன்: கனம் ஸ்தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம் வேந்தன்பட்டிக் கிராமத்தில் மேல் தள குடி நீர்த் தேக்கத் தொட்டி கட்டுவதற்கு 1961-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 9-ம் தேதி அடிக்கல் நாட்டப்பட்டதா ?

(இ) அந்தத் திட்டம் இப்போது எந்த நிலையில் உள்ளது ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : ஆம்.

(இ) அதே கிராமத்தில் தகுந்த இன்னொரு இடத்தில் உயர்நிலை நீர்த் தொட்டி கட்டப்பட்டு வருகிறது.

வெளிநாட்டு மாணவர் விடுதி

*438 கேள்வி.—திரு. முனு. ஆதி: கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வெளிநாடுகளிலிருந்து தமிழ் நாட்டில் கல்வி பயில வரும் மாணவ மாணவிகள் தங்க தனி விடுதி கட்டும் திட்டம் உண்டா ?

(இ) ஆமெனில் எங்கு எவ்வளவு பொருள் செலவில்?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) No.

(b) Does not arise.

நெய்வேலிக்குச் சாலை

*439 கேள்வி—திரு. கி. நாராயணசாமிப் பிள்ளை : கனம் பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நெய்வேலி தொழில் வளப் பகுதிக்கு கனரக இயந்திரங்களைக் கொண்டு போவதற்காக கடலூர், விருத்தாசலம், உளுந்தூர்பேட்டை ரோட்டை அபிவிருத்தி செய்யும் திட்டத்திற்கு எவ்வளவு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது ?

(இ) அந்தத் திட்ட வேலை என்ன நிலையில் உள்ளது ?

கனம் திரு. வெ. ராமையா : (அ) & (இ) சபையில் ஓர் அறிக்கை வைக்கப்பட்டுள்ளது.

*440 கேள்வி—திரு. கி. நாராயணசாமிப் பிள்ளை : கனம் பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

நெய்வேலிக்கும் உளுந்தூர்பேட்டைக்கும் குறுக்கே விருத்தாசலம் வாராமல் புதிய சாலை அமைக்க உத்தேசமுண்டா ?

கனம் திரு. வெ. ராமையா : இல்லை.

---

a 655-658-ம் பக்கங்களில் இரண்டாவது இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.